**IN THE COURT OF SPECIAL SUBORDINATE JUDGE (LAOP), ARAKKONAM.**

**OS. 121/2019**

**Deposition of Witness : PW-1**

**பெயர் : ஜெயந்தி**

**கணவர் பெயர் : தசரதன்**

**Solemnly affirmed in accordance with the provisions of Section 6 of the Oaths Act, 1969 on 18.07.2023.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**என் தாத்தா பெயர் குப்புசாமி ரெட்டியார். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் குப்புசாமி ரெட்டியார் மனைவிகள் கோவிந்தம்மாள், முனியம்மாள் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பாட்டியின் பெயர் அங்கம்மாள். குப்புசாமி ரெட்டியின் மனைவி அங்கம்மாள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குப்புசாமி ரெட்டியார் மனைவிகள் கோவிந்தம்மாள் மற்றும் முனியம்மாள் என்று தான் உள்ளது என்றும், அங்கம்மாள் இல்லை என்றும், அங்கம்மாள் குப்புசாமியின் மனைவி என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குப்புசாமி ரெட்டியின் மைனர் மகன்கள் ருக்மாந்தகன் மற்றும் தசரதன் என்று தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் முனுசாமி பிள்ளை வீதிக்கு வடக்கு என்னுடைய வீட்டிற்கு பாண்டைக்கும் மேற்கு யூனியன் 03 அடி சந்திற்கு தெற்கு, இரங்காச்சாரியார் வீட்டிற்கும் பாட்டைக்கும் வடக்கு என்று சக்குபந்தி உள்ளதா என்றால் உள்ளது. அது வீட்டிற்கு சம்மந்தப்பட்ட சக்குபந்தி ஆகும்.**

வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.13/1 என்று தான் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேற்படி பதிலுரையில் தாவா சொத்தின் சர்வே எண்.13/1 என்றும் பிரதிவாதிகள் சொத்தின் சர்வே எண்.82/2 என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். முனுசாமியின் தந்தையார் இரயில்வேயில் பணிபுரிந்தார் என்றால், எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் முனுசாமியை தெரியும். அதற்கு முன்பு எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது தான் பிரதிவாதிகளை பற்றி விவரம் எனக்கு தெரியவந்தது. வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி ருக்மாந்தகன் என்கிற மோகன், தசரதன் மற்றும் என்னுடைய பாட்டி ஆகியோருக்கு பாகப்பிரிவினை ஏற்பட்டது. மேற்படி ஆவணத்தில் தசரதன் என்கிற தட்சணாமூர்த்தி என்று இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ஆர்.கே.மோகன் மற்றும் ஆர்.கே.தசரதன் தான் கையெழுத்துப் போட்டுள்ளார் என்றால் சரிதான். அதில் ஆர்.கே.தசரதன் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். அவருடைய விருப்பப்படி கையெழுத்து போட்டுள்ளார். நான் 1979–ல் பிறந்ததால் மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ஆர்.கே.தசரதன் உரிமைப்படி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சொத்து விவரத்தில் புஞ்சை சர்வே எண்.13/1–ல் ஜக்கு பந்தி அரசத்தமன் கோயில் மனைக்கு தெற்கு, செய்யூர் போகும் பாட்டைக்கு வடக்கு அரசத்தம்மன் மனைக்கு கிழக்கு, கோவிந்த ரெட்டி மனைக்கு மேற்கு இதன் மத்தியில் கிழக்கு மேற்கு 37 1/2 அடியும், தெற்கு வடக்கு 122 அடியும் உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி என்னுடைய பாட்டி அங்கம்மாள் 1998–ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய பாட்டி அரக்கோணம், எஸ்.ஆர்.கேட். பஜனை கோயில் தெருவில் உள்ள என் அத்தை வீட்டில் இறந்தார். மேற்படி அத்தை வீட்டில் என் பாட்டி எத்தனை வருடம் இருந்தார் என்று எனக்கு தெரியாது. ஆரம்ப காலகட்டத்தில் சென்னையில் உள்ள என்னுடைய அத்தை வீட்டில் தான் இருந்து வந்தார். பாட்டி வாழ்ந்த காலத்தில் அவர்கள் உடைமைகள் அனைத்தும் அரக்கோணம், எஸ்.ஆர்.கேட். பஜனை கோயில் தெருவில் உள்ள என் அத்தை வீட்டில் தான் இருந்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் பாட்டி இறந்தபிறகு என் அத்தை வீட்டிற்கு செல்லவில்லை. 2017–ல் அரசத்தம்மன் கோயில் திருவிழாவிற்கு சென்ற போது தான் என் அத்தையின் மகள் சொன்ன பிறகு தான் சொத்து உள்ளதாக தெரியவந்தது. அதற்கு பிறகு தான் என் பாட்டி வைத்திருந்த பெட்டிகளை திறந்து பார்த்தேன். என் பாட்டி வைத்திருந்த பெட்டி என் பெரிய அத்தை வீட்டில் தான் இருந்தது. 1998–லிருந்து 2017 வரை பெட்டி யார் வீட்டில் இருந்த என்றால் என்னுடைய அத்தை வீட்டில் இருந்து, அத்தனை வருடங்கள் திறக்காமல் தான் இருந்தது. மேற்படி பெட்டி திறக்கும் போது என் அம்மா மற்றும் சகோதரி இருந்தார்கள். அத்தையும் இருந்திருக்கலாம். பெட்டி திறக்கும் போது நான் இல்லை. அதனால் பெட்டியில் இருந்த ஆவணங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் அம்மா சொல்லி தான் ஆவணங்களை பற்றி எனக்கு தெரியும். மேற்படி விவரத்தை வழக்கு பிராதில் சொல்லவில்லை. எனக்கு திருமணம் ஆகவில்லை.

என்னுடைய ஆதார் அட்டையில் தந்தையார் பெயர் தட்சணாமூர்த்தி என்று தான் உள்ளது. அதேபோல் என்னுடைய தாயார் மற்றும் சகோதரிகள் ஆதார் அட்டையில் தட்சணாமூர்த்தி என்று தான் உள்ளது. 2017–க்கு முன்பு உள்ள அனைத்து ஆவணங்களில் என் தந்தை பெயர் தட்சணாமூர்த்தி என்று தான் உள்ளது என்றால் சரியல்ல. வாக்காளர் அட்டையில் ஆர்.கே. தசரதன் என்று தான் உள்ளது. ஆர்.கே.தசரதன் என்ற வாக்காளர் அட்டையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தில் புறநோயாளி பதிவு சீட்டில் என் தந்தை பெயர் தட்சணாமூர்த்தி என்று தான் உள்ளது என்றால் சரிதான். அதற்கு கீழே ஆர்.கே.தட்சணாமூர்த்தி என்று என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.8–ல் தட்சணாமூர்த்தி என்று தான் உள்ளது என்றால் சரிதான். 2017–க்கு முன்பு உள்ள அனைத்து ஆவணங்களில் தட்சணாமூர்த்தி தான் என்று தான் உள்ளது என்றும், ஆர்.கே.தட்சணாமூர்த்தி இல்லை என்றால், சரியல்ல. ஆர்.கே. தட்சணாமூர்த்தி என்று பெயர் உள்ளது. ஆர்.கே.தட்சணாமூர்த்தி என்று பெயரில் உள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எந்த ஆவணம் என்று நினைவில்லை. வா.சா.ஆ.10 ஆவணம் என் தந்தையார் மனநிலை சரியில்லாத போது மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 உயில் ஆவணம் எழுதும்போது என் தந்தையார் மனநிலை சரியாகிவிட்டார் என்று மருத்துவ சான்று தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எங்களிடம் அன்பாகவும் நல்ல நிலையில் பேசினார். அதனால் சான்று வாங்கவில்லை.

வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்கள் இரண்டில் உள்ள கையெழுத்து வித்தியாசம் உள்ளதா என்றால், வா.சா.ஆ.11 தமிழிலும், வா.சா.ஆ.5 ஆங்கிலத்திலும் கையெழுத்து போட்டுள்ளார். மொழிகளில் வித்தியாசம் உள்ளது. என் தந்தை 1973–ல் இருக்கும் போது நல்ல நிலையில் இருந்த போதும் அவர் ஆங்கிலத்திலும், தமிழிலும் கையெழுத்து போடுவார். 2017–க்கு முன்பு 1973–ல் ஆர்.கே.தசரதன் என்று கையெழுத்து போட்டுள்ளார். இதற்கு இடைப்பட்ட காலத்தில் தமிழில் கையெழுத்து போட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை. வா.சா.ஆ.11 ஆவணத்தில் 03–ம் பக்கத்தில் அவருடைய மகனான ஆர்.கே.தசரதன் என்று தான் உள்ளது என்றும், ஆர்.கே. தட்சணாமூர்த்தி என்று இல்லை என்று சொன்னால் சரிதான். ஷீலா மற்றும் சசிகலா என்னுடைய சகோதரிகள். அவர்களுடைய சாட்சி கையெழுத்து ஆர்.கே.தசரதன் என்று தான் உள்ளது என்றும், ஆர்.கே.தசரன் என்கிற தட்சணாமூர்த்தி என்று இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டை அனைத்திலும் என் தந்தையார் பெயர் தட்சணாமூர்த்தி என்று தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்வே எண். 13/1, வார்டு டி, டி.எஸ்.எண்.82, Part 72, Part 71 என்று உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தவதற்கு முன்பு சர்வேயரை வைத்து அளந்து பார்த்து தான் வழக்கு தாக்கல் செய்தேன்.

சர்வேயர் தகவல்படி என்னுடைய இடத்தின் சர்வே எண்.13/1 என்று சொன்னார். அளந்து அத்து கல் எதுவும் போடவில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.